லட்சக்கணக்கான ரூபாய்களை நாம் ஒதுக்க வேண்டிவரும். ஆகவே, மத்திய அரசினுடைய உதவியின் அடிப்படையில்தான் இந்த ஒரு இடம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. அவர்களிடத்திலே வற்புறுத்திப் பெறுவதற்கான முயற்சிகளை இதனுடைய அனுபவத்திலே இருந்துதான் பெறவேண்டும்.

Repatriates Co-operative Bank

*195 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) the details of the purposes for which the Repatriates Co-operative Bank is giving loans; and

(*b*) the total amount so disbursed during 1971, month-wise and item-wise?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) விவர அறிக்கை ஒன்று@ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

Thiru N. DENNIS: Sir, may I know the amount of loan outstanding for recovery?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, கொடுக்கப் பட்ட விவரங்கள்தான் இருக்கின்றன. திரும்பப் பெறவேண்டிய தொகை பற்றிய விவரம் இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

11-00 மு. ப. **திரு. மு. சுருளிவேல்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகளுடைய நிதி ஆதாரங்கள் முழுவதும் மாநில அரசு சம்பந்தப்பட்டதா அல்லது மத்திய அரசு சம்பந்தப்பட்டதா, அல்லது மத்திய அரசு உதவி செய்யவில்லையா? உகண்டாவிலிருந்து வெளியேற்றப்பட்ட வட நாட்டவர்களுக்கு விரைந்து உதவி செய்யும் மத்திய அரசு என் இதற்கு உதவி செய்யவில்லை என்பதை மாநில அரசு தட்டிக் கேட்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தென் மாநிலங்கள் சேர்ந்து, மாநில அரசும் மத்திய அரசும் பங்கு முதலீடு செய்வதன் மூலம் இந்த வங்கிக்கு உதவி அளிக்கப்படுகிறது. தமிழ்நாடு அரசு இந்த வங்கியில் ரூ. 10 லட்சம் முதலீடு செய்துள்ளது.

@ 386-389-ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1973 மார்ச் 1]

THIRU K. M. SUBRAMANIAM: Sir, is it a fact that many of the repatriates who have been advanced loans are not traceable today ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இந்த வங்கியல்லாமல், மாநில அரசு மறுவாழ்வுத் துறைமூலமாக பல கடன்களை வழங்கியிருக்கிறது. பல பேர் இன்னும் திருப்பித் தரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல அவர்களை கண்டுபிடிக்கக் கஷ்டமாகத்தான் இருக்கிறது.

திரு. எஸ். வடிவேல்: தலைவர் அவர்களே, தொழில் செய்வதற்கு இந்த அகதிகளுக்குக் கொடுக்கிற பணத்திற்கு ஜாமீன் கேட்கப்படுகிறதா? அப்படி இருந்தால், ஜாமீன் இல்லாமல் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அவர்கள் பர்மாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் வரும்பொழுது, அவர்கள் அகதிகள் என்ற அத்தாட்சிப் படிதான் கடன் கொடுக்கப்படுகிறது. கடன் கொடுக்கப்பட்டவர்களுக்கு, கொடுக்கப்படவேண்டிய தொகை தவிர அதிகப்படியான தொகை தரவேண்டு மென்றால், செக்யூரிட்டி கேட்கப்படுகிறது. யாராக இருந்தாலும் ரூ. 5,000-க்கு மேற்படாது கடன் பெறுகிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, ஏற்கனவே கொடுக்கப்பட்ட கடனைப் பல காரணங்களால் இழந்துவிட்டு பர்மா அகதிகள் மீண்டும் கஷ்டப் படுகிறார்கள். ஆகவே, கொடுக்கப்பட்ட கடனை ரைட் ஆப் செய்து, அதற்காக ஆணை பிறப்பித்து, அவர்களுக்கு வாழ்வு அளிக்க அரசாங்கம் உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியாவணிமுத்து: அதை ரைட் ஆப் செய்வது மாநில அரசின் பொறுப்பல்ல. மத்திய அரசுதான் செய்யவேண்டும். அப்படியும் சில கோரிக்கைகள் எழுந்துள்ளன.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, அப்படிக் கடன்கள் வழங்கப் படுவதன் மூலமாக அவர்கள் எந்த அளவிற்குப் பயன்பெற்றிருக்கிறார்கள் என்று அரசு ஆராய்ந்திருக்கிறதா? கொடுத்த பணத்தை அவர்கள் திருப்பிக் கொடுக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்து இருக்கிறார்களா? கடன் கொடுக்கப்பட்ட வர்கள் மெய்யாகவே நல்லமுறையிலே பயன்படுத்தி வாழ்க்கையில் பயன் பெறச் செய்யக்கூடிய புதுத் திட்டம் ஏதாவது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நாம் அவர்களுக்கு முதல் தவணையாக இரண்டாயிர ரூபாய் கொடுத்து வியாபாரம் செய்யச் சொல்கிறோம். வியாபாரம் எப்படிச் செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொடுக்கப்படுகிறது. சிலர் அதைப் பெற்று ஒழுங்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் பெரும்பாலானவர்கள் அவர்களுக்கே இருக்கிற வறுமையின் காரணமாக அந்தப் பணத்தை வாங்கிச் செலவழித்துவிடுகிறார்கள். எவ்வளவு பேர்கள் பணம் வாங்கினார்கள், எவ்வளவு பேர்கள் பயன்படுத்தினார்கள், எவ்வளவு பேர்கள் திருப்பிக் கட்டவில்லை என்பதைப்பற்றி எல்லாம் அரசாங்கம் பரிசிலனை செய்துகொண்டு வருகிறது. ஒழுங்காகத் திருப்பிக் கட்டி வருகிறவர்களுக்கு இரண்டாவது தவணையாக 3 ஆயிரம் ரூபாயும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம். அவ்வப்பொழுது அரசு அதிகாரிகள் அதைப் பார்த்துக்கொண்டு வருகிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : இந்த அகதிகள் கூட்டுறவு வங்கியில் எவ்வளவு பேர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்? உறுப்பினர்களாக இல்லாதவர்களுக்கும் பணம் கொடுக்கப்படுகிறதா? 1972–73 ஆம் ஆண்டிலே எவ்வளவு பணம் தரப்பட்டிருக்கிறது, எவ்வளவு பாக்கியிருக்கிறது என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : எத்தனை பேர்கள் உறுப்பினர்கள் என்ற விவரம் இப்பொழுது என்னிடத்தில் இல்லை. உறுப்பினர்களாக இல்லாதவர்கள் பணம் பெறமுடியாது. 1971 ஆம் ஆண்டில் எவ்வளவு தொகை எந்த எந்தக் காரியங்களுக்காகக் கொடுக்கப்பட்டது என்பதைப்பற்றித்தான் இப்பொழுது மேஜைமீது வைக்கப்பட்ட அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. 1972-73 ஆம் ஆண்டிற்கான புள்ளிவிவரங்கள் இப்பொழுது இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த ரீபேட்ரியட்ஸ், கடன் மனுக்களைக் கொடுத்தால் அவை மாதக் கணக்காக கலெக்டர் ஆபீசில் தேங்கிவிடுகின்றன. நானே சில பேர்களுக்காக 2, 3 மாதங்களாக அலைந்து பார்த்தேன். சில மனுக்கள் எங்கே இருக்கின்றன என்றே கண்டு பிடிக்கமுடியவில்லை. இப்படிக் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க எம்.எல்.ஏ.க்கள் கொண்ட ஒரு குழுவை அமைத்துத் துரிதமாக அவற்றைப் பரிசீலிக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : காலதாமதம் ஆவதற்கு பர்மா, இலங்கை முதலிய நாடுகளிலிருந்து அவர்கள் கொண்டுவந்த அத்தாட்சிகள் சரியாக இல்லை என்பது ஒன்று சிலர் இங்கே வந்தபிறகு அந்த முகாமிலிருந்து வேறு இடங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். அவர்கள் அங்கே என்ன செய்கிறார்கள் என்று கண்டுபிடித்து நிரூபிக்க முடியவில்லை. இப்படிப்பட்ட

1973 மார்ச் 1]

சில குறைபாடுகள் உள்ள தகவல்கள் அரசாங்கத்திற்கு வருகின்றன. அதோடு குறிப்பிட்ட தகவல்கள் குறித்த நேரத்திற்குள்ளாக அரசுக்குக் கிடைக்காத நிலையிலே காலதாமதம் ஏற்படுகிறது. சட்ட மன்ற உறுப்பினர்கள் குழு வொன்றை அமைப்பதன்மூலம் காலதாமதத்தை நிவர்த்தி செய்ய முடியும் என்று சொல்வது சரியாக இருக்காது என்று நினைக்கிறேன்.

திரு. கே. எ. வகாப் : துணைத் தலைவர் அவர்களே, அகதிகளுக்கு வழங்கப் படுகின்ற பணம் ரூ. 3,000 என்று சொன்னார்கள். அவர்கள் லாரி வாங்கு வதற்காகவும், மீன்பிடி படகுகள் வாங்குவதற்காகவும் அந்தத் தொகை கொடுக்கப்படுகிறது என்று இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. வியாபாரம் என்பது அதிகமான அளவிற்கு மூலதனம் போட்டால்தான் நடத்த முடியும் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தொகையை உயர்த்த அரசுக்கு உத்தேசம் உண்டா என்று கேளுங்கள்.

திரு. கே. எ. வகாப் : கடன் தொகையை உயர்த்திக் கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மொத்தம் 5,000 ரூபாய் கொடுக்கிறோம். முதல் தவணையாக 2 ஆயிரம் ரூபாயும் இரண்டாவது தவணையாக 3 ஆயிரம் ரூபாயும் கொடுக்கப்படுகிறது. இதைத்தவிர தொழிலுக் கேற்ற பணத்தை வங்கியிலிருந்து அவர்கள் பெறுகிறார்கள். அதிலே ஏற்றமோ குறைவோ கிடையாது.

திரு. ஆ. பரந்தாமன் : இந்த வங்கியின் வாயிலாகக் கடன் பெற்றவர்கள் வட மாநிலங்களுக்குச் சென்றுவிட்டார்கள் என்றும் அதன் காரணத்தினால் கணிசமான தொகை ரைட் ஆப் செய்யப்பட்டுவிட்டது என்றும் சொல்லப் படுகிறதே அது உண்மையா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படித் தகவல் என்னிடம் இப்போது இல்லை.

திரு. ப. முத்துசாமி : கடன் தொகைகளைப் பெற்ற பலபேர்கள் முறையாக அதைப் பயன்படுத்தாமல் இருப்பதால் அவர்களுக்குப் பணமாகக் கொடுக்கா மல் அவர்களுக்கு வேண்டிய கருவிகளையும் எக்விப்மெண்ட்களையும் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: பெரும்பாலான அகதிகள் கையில் பணமாகத்தான் கேட்கிறார்கள். சில பேர்கள் அதை வைத்து வீடு கட்டிக்கொள்வோம் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல் பொருள்களாகக் கொடுப்பதற்கான ஒரு யோசனை உண்டு. இன்னும் அதுபற்றி முடிவு எடுக்கவில்லை.

இலச்சிவாக்கம் அரிசனக் குடியிருப்புக்கு குடிநீர் வழங்கல்

*196 வினு—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த இலச்சிவாக்கம் அரிசனக் காலனியில் மேல்நிலைக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் இலச்சிவாக்கம் அரிசனக் காலனியில் மேல்நிலைக் குடிநீர் திட்ட வேலை நடைபெறுகிறதென்று அறிவித்துள்ளார். இவ்வேலை இன்னும் 3 மாதங்களில் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. கா. வேழவேந்தன்: இந்த வேலை சென்ற ஆண்டே எடுத்துக் கொள்ளப்படப் போவதாக இருந்தும் இப்பொழுதுதான் துவங்கப்பட்டு இருக்கிறது. கட்டாயம் இந்த ஆண்டு எடுத்து நிறைவேற்றப்படக்கூடிய வகையில் சிறப்பாணை ஒன்று அரசு பிறப்பிக்க முன்வருமா? அங்கே ஆய்வுப் பணிகளை எடுத்துக்கொள்ள உரிய அலுவலாளர்கள் இல்லை என்று மாவட்ட நல அதிகாரிகள் கூறுகிறார்களே, எனவே, போதுமான அதிகாரிகளைப் போடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நிச்சயமாக இந்த ஆண்டு முடிவடையும். மூன்று மாதங்களில் செய்ய வேண்டுமென்றால் குறைந்தது ஆறு மாதத்திற்குள்ளாவது—1973 ஆம் ஆண்டிலே முடிந்துவிடும். எனவே, அது பற்றி உறுப்பினர் அவர்களுக்குச் சந்தேகம் வேண்டாம். போதுமான அதிகாரிகள் இல்லாதது காரணம் என்று சொல்கிறார்கள். அது காரணமில்லை. போதுமான இடம் தேவைதானா என்பதுபற்றித்தான் முடிவு எடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது.

திரு. வீ. செல்லதுரை: அரிசனக் காலனியில் குடிநீர்த் திட்டம் எந்த அடிப்படையிலே மேற்கொள்ளப்படுகிறது?